**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.9**

Name : டாக்டர் திரு. பிரைட்சிங் பிரான்சிஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:16.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவ கல்லூரியில் எலும்பு மருத்துவ துறையில் மேல் படிப்பு படித்து வருகிறேன். 19.04.2021ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் குலசேகரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது தங்கச்சன் மகன் செந்தில் என்பவர் (41) 108ல் ஆம்புலன்சில் வந்தார். அவர் சுயநினைவுடன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார். அப்போது அவர் 19.04.2021 அன்று இரவு 09.45 மணியளவில் பொன்மனை சந்திப்பில் வைத்து அடையாளம் தெரிந்த ஒரு நபர் வெட்டுக்கத்தி கொண்டு தாக்கியதாகவும் அதனால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற வந்ததாக கூறினார். அவரை பரிசோதிக்கும் போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

1) பின்பக்க தலையில் இடது புறத்தில் சிதைவு காயம் 5 x 3 cm x எலும்பு தெரிந்தது அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது ரத்தம் வடிந்து காணப்பட்டது.

2) இடது புற பக்கவாட்டு தலையில் (பரைட்டல்) 8x 2 x எலும்பு தெரிந்த அளவு ஆழமுள்ள சிதைவு காயம் காணப்பட்டது. ரத்தம் வடிந்து காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அங்கு அவர் 20.04.2021ம் தேதி விடியற்காலை 12.25 மணிக்கு உள்நோயாளியாக அனுமதித்து 03.05.2021ம் தேதி மதியம் வீட்டிற்கு திரும்பியுள்ளார். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.4. அந்த காயச்சான்றில் முதல் காயம் சாதாரண காயம் என்றும், 2வது காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். தலையில் தசையளவு குறைவாக இருக்கும் என்றால் சரிதான். காயத்தின் ஆழம் குறிப்பிட்டு எத்தனை அளவு என்று குறிப்பிடவில்லை. எலும்பு தெரிந்த காயம் என்று குறிப்பிட்டுள்ளேன். ஒரு நபர் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழும் போது மார்பிள், கிரானைட் போன்ற துண்டுகள் மீது பட்டு மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. கூர்மையான ஆயுதத்தால் வெட்டும் போது வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.165 /2021**

**Deposition of P.W.** 10

Name : மணி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**16.07.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் சுருளோட்டில் வசித்து வருகிறேன். பால்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். எதிரியின் ஊர் வீரபுலி. 2021ம் ஆண்டு நான் குலசேகரம் காவல்நிலையத்திற்கு சென்றிருந்தேன். எதிரியின் வழக்கு காவல்நிலையத்திற்கு வந்தது. காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் எதிரியை விசாரித்தார். சார்பு ஆய்வாளர் எதிரியை அடிக்கவில்லை. எதிரி செந்திலை வெட்டியதாக தெரிய வந்தது. என்ன முன்விரோதம் என்று தெரியாது. செந்திலை மருத்துவமனைக்கு சென்று பார்க்க போனேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நானும், ராமையனும் கையொப்பம் போட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டவர் எனது மைத்துனர். அத்தாட்சியில் உள்ள கையொபப்த்தை காவல்நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள். நான் எதுவும் படிக்கவில்லை. அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165 /2021**

**Deposition of P.W.** 11

Name : பாக்கியராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:16.07.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் அருமனையில் வசித்து வருகிறேன். நான் குலசேகரம் மின்வாரிய அலுவலகத்தில் பொன்மனை பகுதி கம்பியாளராக பணியாற்றி வந்தேன். 19.04.2021ம் தேதி நான் இரவு பணியில்இருந்தேன். அப்போது மின்சாரம் இருந்ததா என்று போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மின்சாரம் உள்ள இடம் மற்றும் மின்சாரம் இல்லாத இடம் ஆகியவை குறித்து தகவல் சொல்ல பதிவேடு பராமரிப்போம் என்றால் அலுவலகத்தில் தான் பராமரிப்பார்கள், நாங்கள் பராமரிக்க மாட்டோம். அலுவலகத்தில் உள்ள பதிவேட்டை பார்த்தால் தான் மின்சாரம் இருந்ததா என்பதை சொல்ல முடியும் என்றால் நான் மின்சாரம் இருந்ததாக கூறினேன். பதிவேட்டை பார்த்தால் தான் ஆவணபடி தெரிய வரும் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.